சுரண்டை, காமராஜர் அரசு கலைக்கல்லூரி முதல்வர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள் முன்னிலை
திருமதி ரா.ஜெயா, எம்.எஸ்ஸி, எம்.பில்

ந.க.எண்:6893-அ-2019 நாள் : 13.08.2020

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி – கல்லூரிக் கல்வித்துறை – சுரண்டை, காமராஜர் அரசு கலைக்கல்லூரி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் - இளநிலை உதவியாளர் தொகுதி IV – 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 தெரிவு – திரு.ம.ஜான் சேவியர் நியூட்டன் இளநிலை உதவியாளர் – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக

பார்வை : 1.தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையச் செயலர் கடித எண் 1018 /PSD-G2/2019, நாள்: 13.02.2019.

2. சென்னை-06, கல்லூரிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் 788-பி1-2019 நாள் 28.02.2019.

3.கோவை -18, அரசு கலைக் கல்லூரி முதல்வரின் செயல்முறைகள் ந.க.எண் 401-G -2019 நாள் 13.03.2019

4. . சென்னை-06, கல்லூரிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் 37678-பி3-2019-31 நாள் 29.11.2019.

5.சென்னை-06, கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண் 7881-பி1-2019 நாள் 03.12.2019.

6. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அரசிதழ் தொகுதி 18, பக்கம் 2961, பதிவெண் 190504908.

*****

பார்வை(1)ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலரது கடிதப்படி இளநிலை உதவியாளராகத் (தொகுதி IV) தெரிவு செய்யப்பட்டு, பார்வை(2) ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநரது செயல்முறைகளின்படி கோயம்புத்தூர், அரசு கலைக் கல்லூரிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை(3)ல் காணும் கோவை -18, அரசு கலைக் கல்லூரி முதல்வரின் செயல்முறைகளில் நியமனம் வழங்கப்பட்டு திரு.ஜான் சேவியர் நியூட்டன் 13.03.2019 முற்பகல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்தார்.

பார்வை(4)ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி கோவை, அரசு கலைக் கல்லூரியிலிருந்து பணியிடம் மாற்றம் பெற்று 03.12.2019 முற்பகல் இக்கல்லூரிப் பணியில் சேர்ந்தார். பார்வை(5)ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநரின் ·செயல்முறைகளின்படி கீழ்கண்ட நிபந்தனைப்படி பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

“இப்பணி வரன்முறை (தொகுதி IV) – 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 பணிநியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்படவுள்ள இறுதி தீர்பாணைக்குட்பட்டது”.

மேலும் பார்வை(6)-இல் தெரிவித்துள்ளபடி அன்னார் மே – 2019இல் நடைபெற்ற மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். அதற்கான நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பார்வை(1)-இல் காணும் கடிதத்தின்படி 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 (தொகுதி IV)-இல் இளநிலை உதவியாளராகத் தெரிவு செய்யப்பட்டு 13.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெற்று பணிபுரிந்து வரும் திரு.ஜான் சேவியர் நியூட்டன் என்பாருக்கு மேற்காண் நிபந்தனைக்குட்பட்டு அன்னாரது நியமன நாளான 13.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் அன்னாருக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

ரா. ஜெயா 16.9.2020
முதல்வர் (மு.கூ.பொ)
காமராஜர் அரசு கலைக் கல்லூரி
சுரண்டை

ம.ஜான்
16/09/2020

பெறுநர்
சார்ந்த பணியாளர்
நகல்:

1) ஆ பிரிவு
2) பணிப்பதிவேடு
3) சென்னை-06, கல்லூரிக் கல்வி இயக்குநர்
(தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது)